27.2.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## இயற்கை வேளாண் முறையை அதிகரிக்க வேண்டும்

தமிழகத்தில் இயற்கை வேளாண்முறையை அதிகரிக்கவேண்டும் என, மதுரை வேளாண் கல்லூரி கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது. மதுரை வேளாண் கல்லூரி பொன்விழா ஆண்டையொட்டி, உணவு உற்பத்திக் கான தேசியக் கருத்தரங்கு, வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் தமிழ்நாடு வேளாண் பல்கலைகழக முன்னாள் துணைவேந்தர கே.கே.கிருஷ்ணமூர்த்தி பேசியது: நம் நாட்டில் உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைந்து விட்டோம். அதே சமயத்தில் உணவுப்பொருள் களில் இயற்கையான ஊட்டச்சத்துக்களை அதிகரிக்கவேண்டும். அதற்கு இயற்கை வேளாண் முறைகளை அதிகரிக்க வேண்டும். ரசாயன உரங்களை அதிகம் பயன்படுத்தியதால், மண்ணில் நுண்ணுயிரிகள் குறைந்துவிட்டன. இதை அதிகரிக்கவேண்டுமானால் பண்ணைக் கழிவுகளை அதிக அளவில் உரமாக்கவேண்டும். இதனால் மண்ணின் வளம் அதிகரித்து நீடித்த நிலையான மகசூல் உற்பத்தியை நாம் அடையமுடியும் என்றார். தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் கே.ராமசாமி: தமிழகத்தில் வட்டார வாரியாக இறவை, மானாவாரி பயிர் சாகுபடியை பட்டியலிட்டு அந்தெந்தப் பகுதிக்கு ஏற்ற, குறைந்த நீரில் அதிக மகசூல் தரக்கூடிய, நோய் எதிர்ப்பாற்றல் உள்ள ரகத்தை தேர்வு செய்து, அதற்கான சாகுபடி தொழில்நுட்பங்களை வேளாண் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து, விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும் என வலியுறுத்தினார். மத்தியதொழில் வர்த்தகத் துறை துணை பொதுமேலாளர் ரீபாஆபிரஹாம்: இந்தியாவில் இயற்கை வேளாண்

முறையில் 4.72 மில்லியன் ஹெக்டேரில் சாகுபடி நடைபெறுகிறது. மொத்தம் 14 சதவிகிதம் உற்பத்தியாகிறது.

**<u>கோமாரி நோய்த் தடுப்பு குறித்த கிராம சபைக் கூட்டம்</u>**

தண்டராம்பட்டை அடுத்த கீழ்வணக்கம்பாடி ஊராட்சியில் கோமாரி நோயின் அறிகுறிகளும், தடுப்பு முறைகளும் குறித்த சிறப்பு கிராம சபைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. கீழ்வணக்கம்பாடியிலுள்ள கூத்தாண்டவர் கோயில் வளாகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), ந.கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். கீழ்வணக்கம்பாடி ஊராட்சி மன்றத் தலைவர் அமுதா செல்வதுரை முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்ற துணைத்தலைவர் உ.முருகன், ஊராட்சி செயலாளர் வெ.மாணிக்கவாசகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் கிராம மக்களிடையே கோமாரி நோய் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டது. மேலும் கோமாரி நோய் பரவும் விதம், நோயின் அறிகுறிகள், நோயின் தாக்கம், சிகிச்சை மேற்கொள்வதற்கான வழிமுறைகள், தடுப்பு முறைகள், கால்நடை பராமரிப்பின் அவசியம் என்பன உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் கூட்டத்தில் பங்கேற்றவர்கள் கருத்துரைகளை வழங்கிப் பேசினர்.

**<u>3.31 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி மார்ச் 1-ல் முகாம் தொடக்கம்</u>**

திருச்சி மாவட்டத்தில் 3.31 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி செலுத்தும் வகையில், மார்ச் 1-ம் தேதி முதல் மார்ச் 21-ம் தேதி வரை கோமாரி நோய்த் தடுப்பூசி செலுத்தும் முகாம் நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிச்சாமி தெரிவித்துள்ளார். கோமாரி நோய்த் தாக்குதலிலிருந்து கால்நடைகளைப் பாதுகாக்கும் வகையில், மார்ச் 1-ம் தேதி முதல் மார்ச் 21-ம் தேதி வரை மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும், கால்நடைகளுக்குக் கோமாரி நோய்த் தடுப்பூசி செலுத்தும் முகாம் நடைபெறவுள்ளது. காலை 6 மணி முதல் காலை 9 மணி, பிற்பகல்

3 மணி முதல் பிற்பகல் 5 மணி வரையிலும் இப்பணி நடைபெறும். மாவட்டத்தில் 3.31 லட்சம் கால்நடைகளுக்குத் தடுப்பூசி செலுத்தும் வகையில் இந்த முகாம் நடத்தப்படுகிறது. கால்நடை வளர்ப்போர், தங்கள் கால்நடைகளை தடுப்பூசி முகாமுக்கு உள்படுத்த ஆர்வம் காட்ட வேண்டுமென ஆட்சியர் தனது செய்திக் குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தானியங்கி கதவு! : லட்சுமிபுரம் அணைக்கட்டின் உயரத்தை அதிகரிக்க... : கூடுதலாக தண்ணீரை தேக்க விவசாயிகள் எதிர்பார்ப்பு</u>**

பொன்னேரி: ஆரணி ஆற்றின் குறுக்கே உள்ள, லட்சுமிபுரம் அணைக்கட்டில், கூடுதல் தண்ணீரை தேக்கி வைக்க, தானியங்கி கதவு (ஆட்டோமேட்டிக் டில்டிங் ஷெட்டர்ஸ்) மூலம், அதன் உயரத்தை அதிகரிக்க வேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். பொன்னேரி அடுத்த, லட்சுமிபுரம் பகுதியில், ஆரணி ஆற்றின் குறுக்கே, 116 மீட்டர் நீளம், 14 அடி உயரம் கொண்ட அணை உள்ளது. இதில் மழைக்காலங்களில், 300 மில்லியன் கனஅடி நீர் தேக்கி வைக்கப் படுகிறது. அணைக்கட்டு நிரம்பும்போது, இரு கரைகளிலும் உள்ள ஆறு மதகுகள் மூலமாக, பெரும்பேடு, காட்டூர், தத்தமஞ்சி உள்ளிட்ட ஏரிகளுக்கு, கால்வாய்கள் மூலம் மழைநீர் கொண்டு சென்று சேமிக்கப்படுகிறது. ஆரணி ஆற்றை ஒட்டியுள்ள ஏரிகளில் சேமித்து வைக்கப்படும் உபரிநீரை கொண்டு, 3,800 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன் பெறுகின்றன.

ஆழ்துளை மோட்டார்களால்...

ஆலாடு, ரெட்டிபாளையம், மனோபுரம் உள்ளிட்ட கிராமங்களுக்கு, அணைக்கட்டு பகுதியிலிருந்து, ஆழ்துளை மோட்டார்கள் மூலம், குடிநீர் வினியோகம் நடைபெறுகிறது. அதிகரித்துவரும் ஆழ்துளை மோட்டார் களால், நிலத்தடி நீர் குறைந்து வருவதாக விவசாயிகள் கூறுகின்றனர். இதுகுறித்து, ஆரணி ஆற்றை ஒட்டி, விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகள் கூறுகையில், 'அணைக்கட்டு பகுதியில், ஏராளமான ஆழ்துளை மோட்டார்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இங்கிருந்து, பழவேற்காடு பகுதிக்குக்கூட, கூட்டு குடிநீர் திட்டம் மூலம், குடிநீர் கொண்டு செல்ல ஆழ்துளை மோட்டார் அமைக்கப்பட்டு உள்ளது' என்றனர். மேலும், 'அதிகப்படியான ஆழ்துளை மோட்டார்களால், நிலத்தடி நீர் குறைந்து வருகிறது. நிலத்தடி நீரை பாதுகாக்க, அணைக்கட்டின் உயரத்தை அதிகரித்து, கூடுதலாக தண்ணீரை சேமிக்க வேண்டும். கொற்றலை ஆற்றில், தாமரைப்பாக்கம் அணைக்கட்டில் உள்ளது போல், லட்சுமிபுரம் அணைக்கட்டிலும் தானியங்கி கதவு (ஆட்டோமேட்டிக் டில்டிங் ஷெட்டர்ஸ்) அமைக்க வேண்டும்" என்றனர்.

'ஆட்டோமேட்டிக் டில்டிங் ஷெட்டர்ஸ்' அணைக்கட்டு, தற்போது, 14 அடி உயரத்தில் அமைக்கப்பட்டு உள்ளது. தானியங்கி கதவு (ஆட்டோமேட்டிக் டில்டிங் ஷெட்டர்ஸ்) அமைத்து, அதன் உயரத்தை மேலும், மூன்று அடி உயர்த்தினால், கூடுதலாக, 100 மில்லியன் கனஅடி தண்ணீரை சேமிக்க முடியும் என, விவசாயிகள் கூறுகின்றனர். இது, இரும்பு தளவாடங்களை கொண்டு, மடங்கி நிமிரும் வகையில், அமைக்கப்படும். இதற்கு, 'ஆட்டோமேட்டிக் டில்டிங் ஷெட்டர்ஸ்' என்று பெயர். அணைக்கட்டில் அதிகப்படியான தண்ணீர் செல்லும்போது, தானாக தண்ணீர் செல்லும் திசையில் மடங்கும். குறையும்போது தானாக நிமிர்ந்துவிடும். இதன் மூலம் அணைக்கட்டில் வழிந்தோடும் நீரை தேக்கிவைக்க முடியும். இதுகுறித்து, பெயர் வெளியிட விரும்பாத

பொதுப்பணி துறை பொறியாளர் ஒருவர் கூறுகையில், 'அணைக்கட்டின் உயரத்தை அதிகரிப்பது தொடர்பாக, அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று, விவசாயிகளின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.

**<u>கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க முகாம்</u>**

காஞ்சிபுரம்: ஆடு, மாடுகளுக்கான இனப்பெருக்க பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம், இன்று முதல் இரண்டு நாட்கள் நடைபெற உள்ளது. மாவட்ட ஆட்சியர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ஊரக பகுதிகளில், வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில், நான்கு வெள்ளாடுகள் அல்லது ஒரு கறவை மாடு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், 86,472 ஆடுகளும், 3,550 கறவை மாடுகளும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆடு, மாடுகளுக்கு குடற்புழு நீக்கம் மற்றும் இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை முகாம் நடத்த, கால்நடைத் துறை முடிவு செய்தது. இந்த முகாமில், இலவசமாக வழங்கப்பட்ட ஆடு, மாடுகள் மட்டுமல்லாமல், கிராமப்புறங்களில் உள்ள அனைத்து ஆடு, மாடுகளுக்கும் பரிசோதனை செய்யப்படும். இன்று முதல் இரண்டு நாட்களுக்கு, அந்தந்த கிராமங்களில் நடத்தப்படும் இந்த முகாமில், அனைத்து கால்நடை விவசாயிகளும் கலந்து கொண்டு பயன் பெறலாம். இவ்வாறு, அந்த செய்திக்குறிப்பில் மாவட்ட ஆட்சியர் தெரிவித்து உள்ளார்.

**<u>விவசாயிகளுக்கு இடுபொருட்கள்</u>**

திருத்தணி: வேளாண் துறையின் மூலம் விவசாயிகள் மற்றும் மகளிர் குழுக்களுக்கு, இடுபொருட்கள், மானியத் தொகை வழங்கப்பட்டது.

திருத்தணி ஒன்றிய வேளாண் துறை சார்பில், விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கும் விழா, உதவி இயக்குனர் பிரசாத் தலைமையில் நேற்று நடந்தது. இதில், மாவட்ட வேளாண் துணை

இயக்குனர் பாபு, இணை இயக்குனர் சுந்தர்ராஜன் கலந்து கொண்டு, அம்மா பண்ணை மகளிர் குழுவிற்கு, 4,800 ரூபாய் மதிப்பிலான, நேரடி நெல் விதைப்பு இயந்திரம் வழங்கினர். இந்த இயந்திரத்திற்கு அரசு மானியமாக, 4,000 ரூபாய் வழங்கப்படுகிறது. அதே போல் இரண்டு விவசாயிகளுக்கு விசைத்தெளிப்பான், கைதெளிப்பான் வழங்கப்பட்டது. இதுதவிர, திருந்திய நெல் சாகுபடி செய்த, 10 விவசாயிகளுக்கு, தலா, 1,500 ரூபாய்க்கான காசோலையும் வழங்கப்பட்டது. மேலும், நடமாடும் மண் ஆய்வுக்குழு மூலம் விவசாயிகளுக்கு மண் பரிசோதனை செய்து தரப்பட்டது.

## <u>வனப்பகுதியில் வேட்டை தடுப்பு முகாம் : ரூ.7.2 லட்சம் செலவில் பணிகள் தீவிரம்</u>

ஈரோடு:வனப்பகுதியில் வேட்டை தடுப்பு முகாம் கட்டிடம் கட்டும் பணி, தீவிரமாக நடந்து வருவதாக, ஈரோடு வனபாதுகாப்பு அலுவலர் நாகராஜன் தெரிவித்தார். இது குறித்து வனபாதுகாப்பு அலுவலர் நாகராஜன் கூறியதாவது: ஈரோடு மாவட்டம் சென்னம்பட்டி, பாலாறு பகுதிகளில் வன விலங்கான மான், காட்டுக்கோழி, காட்டெருமை, மலைப்பன்றி என மனிதர்கள் விரும்பி சாப்பிடும் வகையில், பல விலங்குகள் நடமாட்டம் அதிகம் உள்ளது. விலங்குகள் அதிகம் உள்ளதால் சாதாரண நாட்களில் மட்டும் அல்லாது, பண்டிகை காலங்களிலும், சமூக விரோத கும்பல்கள், விலங்குகளை வேட்டையாட, காட்டுக்குள் செல்ல வருகின்றனர். மேலும், கர்நாடக எல்லைப்பகுதியில் இருந்தும், வருவதற்கு வாய்ப்புண்டு. விலங்குகளை பாதுகாக்கும் வகையிலும், சமூக விரோதிகளை கண்டறியும் விதத்திலும், சென்னம்பட்டி, பாலாறு பகுதியில் வேட்டை தடுப்பு முகாம் அமைக்க, அரசுக்கு, ஈரோடு வனத்துறை பரிந்துரை செய்து, கடிதம் அனுப்பியது.அதன்படி, கடந்தாண்டு ஈரோடு வனப்பகுதியான சென்னம்பட்டி, பாலாறு வனச்சரகத்தில் வேட்டை தடுப்பு முகாம்கள்

கட்ட, அரசு உத்தரவிட்டது. இதற்காக, அரசு, கடந்தாண்டு, 7.2 லட்சம் ரூபாய் வனத்துறைக்கு நிதி ஒதுக்கியது. அதன்படி, கடந்தாண்டே வேட்டை தடுப்பு முகாம், கட்டிடம் கட்டும் பணியை, ஈரோடு வனத்துறை மேற்கொண்டு வந்தது. அந்த பணிகள், தற்போது முடியும் தருவாயில் உள்ளது. குறிப்பாக, ஓரிரு மாதத்தில் பணிகள் முடியும்.இந்த பணிகள் முடிந்தால், சுழற்சி முறையில் அங்கு வேட்டை தடுப்பு காவலர்கள், எந்நேரமும் பாதுகாப்பு பணியில் பணியாற்றுவர். மேலும், வேட்டை தடுப்பு காவலர்கள் தங்குவதற்கு, முகாம் அருகே ஒரு அறையும் கட்டப்பட்டுள்ளது. இவர்களுக்கு தேவையான வசதிகளை, வனத்துறை செய்து கொடுக்கும். இதனால், அப்பகுதியில் வன விலங்குகளை வேட்டையாட வரும் நபர்களை, எளிதில் கண்டுபிடிப்பதோடு, வனவிலங்குகளையும் காப்பாற்ற முடியும். அப்பகுதியில் உள்ள விவசாய பயிர்களின் சேதத்தையும் குறைத்திட முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**<u>ஐந்து ஆண்டு ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கோதுமை ரகம்</u>**

குன்னூர் : "புதிய ரகமான "கோ டபிள்யு3' ரகத்தின் மூலம் ஒரு எக்டரில், 41 ஆயிரம் கிலோ கோதுமை சராசரி விளைச்சல் கிடைக்கும்.' என, தெரிவிக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே வெலிங்டனில் நடந்த கோதுமை உழவர் தின விழா கருத்தரங்கிற்கு தலைமை வகித்து, முதன்மை விஞ்ஞானி சிவசாமி பேசியதாவது:நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே வெலிங்டனில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி மண்டல நிலையம் மற்றும கோவை வேளாண்மை பல்கலை கழகமும் இணைந்து, மலை மற்றும் மலைசார்ந்த பகுதிகளுக்காக, ஐந்து ஆண்டு ஆராய்ச்சி பிறகு "கோ டபிள்யு03' என்ற புதிய கோதுமை ரகத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.இதற்காக, தேனி, திண்டுக்கல், கோவை, நீலகிரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, வெள்ளூர், திருவண்ணாமலை ஆகிய, 14 மாவட்டங்களிலும், கர்நாடகாவில், மைசூர், மாண்டியாவிலும் மத்திய அரசின் கோதுமை அபிவிருத்தி, திட்டத்தின் கீழ், இலவசமாக

செயல்முறை பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ரகமானது குறுகிய காலத்தில், அதிக மகசூல் கிடைக்கும். அதிக நுண்ணூட்டச் சத்துகள், இரும்பு, தாதுச்சத்து அதிகம். ஒரு எக்டருக்கு, 41 ஆயிரம் கிலோ கோதுமை சராசரியாக கிடைக்கும். தமிழகத்தில் சீதோஷ்ண நிலையை தாங்கி வளரும். சமவெளியில் கோதுமையில் பொதுவாக, "துரு' நோய் தாக்கும். ஆனால், இந்த ரகத்துக்கு, நோய் எதிர்ப்புசக்தி அதிகம். வடகிழக்கு பருவ மழை பொய்த்தால், கூட கோதுமை பயிரிட முடியும். தானியம் கிடைப்பதுடன் மாடுகளுக்கு தீவனமாகவும் அமையும். அதிக வருமானம் கிடைக்கும் என்பதால், மாற்றுப்பயிராகவும் பயன்படுத்தலாம். குளிர் கால பயிர் என்பதால், அக்டோபர் நவம்பரில் விதைத்தவுடன் மார்ச் மாதம் அறுவடை செய்யலாம். நீலகிரியில், இரு சீசன்களிலும் விளைவிக்கலாம். இதனை பயன்படுத்தி விவசாயிகள் அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு, விஞ்ஞானி சிவசாமி பேசினார்.

## <u>வேளாண் அறிவியல் நிலையத்தில் செயல் விளக்கம்</u>

திருவாரூர் :நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நடவு இயந்திரம் செயல் விளக்க நிகழ்ச்சியில் அமைச்சர் மற்றும் முன்னோடி விவசாயிகள் பங்கேற்றனர்.

திருவாரூர் மாவட்டம்,நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பல்வேறு தொழில் நுட்பட்பத்துடன் கூடிய புதிய இயந்திரம் ஜப்பானி லிருந் து இறக்குமதி செய்யப்பட்டது. இந்த புதிய இயந்திரம் மூலம் வயலில் விதை தெளித்தும், முதிற்சி அடைந்த நாற்றை நட்டும் விரைவில் பணிகளை சிரமமின்றி செய்யும் வகையில் வடிவ மைக்கப்பட்டுள்ளது. இதற்கான செயல் விளக்க நிகழ்ச்சி கலெக்டர் மதிவாணன் முன்னிலையில் நடந்தது. வேளாண் இணை இயக்குனர் மதிவாணன் உள்ளிட்ட வேளாண் அதிகாரிகள் முன்னோடி விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர். இதில் உணவு மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் காமராஜ் நேரில் பங்கே ற்று செயல்

விளக்கத்தில் சந்தேகங்களை கேட்டார். பின்னர் விவசாயிகளுக்கு பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

## விவசாயிகளுக்கான பட்டறிவு பயணம்

திண்டுக்கல் : அட்மா திட்டத்தின் சார்பில், ஒட்டன்சத்திரம் விவசாயி களுக்கான பட்டறிவு பயணம் நடந்தது.மதுரை வாடிப்பட்டியில் உள்ள மண்புழு உரம் தயாரிக்கும் இடத்திற்கு விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டனர். மண்புழு தயார் செய்யும் முறை, அதனால் கிடைக்கும் பயன்கள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. செயற்கை உரத்தை தவிர்த்து இயற்கை உரத்தை தயாரித்து பயன்படுத்தவும் அறிவுறுத்தப் பட்டது. ஒருங்கிணைப்பாளர் அமலா ஏற்பாடுகளை செய்திருந்தார்.

## குடும்பத்திற்கு ஒரு கத்தரிக்காய் போதுமே

காந்திகிராமம் : காந்திகிராம பல்கலை வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் உதயகுமாரின் வீட்டு தோட்டத்தில் காய்க்கும் கத்தரிக்காய் 300 கிராம் வரை உள்ளது. அவர் நாட்டுரக மரக்கத்தரியை பயிரிட்டுள்ளார். தோட்டத்தில் 4 செடிகள் உள்ளன. காய்கள் வெள்ளை நிறத்தில் காய்க்கின்றன. ஒவ்வொன்றும் 250 முதல் 300 கிராம் வரை உள்ளது. (சாதாரண கத்தரிக்காய் 25 முதல் 50 கிராம் வரை இருக்கும்) ஒரு செடியில் ஆண்டு முழுவதும் 20 கிலோ பறிக்கலாம். இவை மரம்போல் வளர்ந்து 5 ஆண்டுகள் காய்க்கும். மற்ற ரகங்கள் ஓராண்டு மட்டுமே காய்க்கும். இந்த ரகத்தை விவசாயிகளுக்கு பரிந்துரை செய்ய வேளாண் அறிவியல் மையம் முடிவுசெய்துள்ளது. உதயகுமார் கூறியதாவது: மரக்கத்தரியை பெங்களூர் பகுதியில் வீடுகளில் வளர்க்கின்றனர். அங்கிருந்து வாங்கி வந்தேன். இரண்டு மாதங்களில் காய்க்க துவங்கியது. விதைகள் குறைவாக இருப்பதால் சுவையாக இருக்கிறது. நான்கு பேர் குடும்பத்திற்கு சமையல் செய்ய ஒரு காய் போதும். மாடித்தோட்டத்தில் பயிரிடலாம். காய் நிறத்தை மாற்றவும், செடிகளை பதியம்போட்டு வினியோகிக்கவும் திட்டமிட்டுள்ளோம், என்றார்.

## ஆயக்குடி கொய்யாவிற்கு கிராக்கி; ஒரு பழம் ரூ.20க்கு விற்பனை

பழநி : திண்டுக்கல் மாவட்டம் ஆயக்குடி கொய்யா, வரத்துகுறைவு காரணமாக ஒரு பழம் ரூ.20க்கு விற்பனை செய்யப்படுகிறது. பழநி அருகே ஆயக்குடி, கணக்கன்பட்டி, சட்டப்பாறை, கோம்பைபட்டி, வேப்பன்வலசு, வத்தகவுண்டன்வலசு பகுதிகளில் கொய்யா விளைவிக்கப்படுகிறது. தேனி, திண்டுக்கல், திருப்பூர், ஈரோடு, சேலம், கோவை போன்ற வெளிமாவட்ட வியாபாரிகள் ஆயக்குடியில் மொத்தமாக கொள்முதல் செய்கின்றனர். தற்போது போதிய மழையில்லாமல் விளைச்சல் குறைந்துள்ளது. அதேசமயம் பழத்தின் தேவை அதிகரித்துள்ளது. இதனால் ஆயக்குடி சந்தையில் ஒரு கூடை (15கிலோ) ரூ.400 முதல் ரூ.500 வரை விற்கப்படுகிறது. வெளியூர் வியாபாரிகள் அதிகளவில் வாங்கிசெல்வதால் பழநி பஸ் ஸ்டாண்ட், கிரிவீதிகளில் ஒரு கிலோ கொய்யாபழம் ரூ.80 வரை விற்கப்படுகிறது. ஆயக்குடி கொய்யா வியாபாரி காந்திமுருகன் கூறுகையில், "மொத்தவிலைக்கு ஆயக்குடி சந்தையில் கூடைக்கணக்கில் வாங்கி சில்லரைவிலைக்கு பழநிக்கு வரும் பக்தர்களிடம் விற்கிறோம். கொய்யா வரத்து இல்லாததால் விலை உயர்ந்துள்ளது. ஒருகிலோ ரூ.70 முதல் ரூ.80வரை தரத்திற்கு தகுந்தாற்போல் விற்கிறோம். பெரிய சைஸ் கொய்யா பழம் ஒன்று ரூ.20க்கு விற்கிறோம்,'என்றார்.

## மருத்துவ குணமுள்ள "ஸ்பைருலினா' பாசி வளர்க்க பல்கலை ஏற்பாடு

திண்டுக்கல் : மருத்துவ குணம் மிகுந்த "ஸ்பைருலினா' வளர்ப்புக்கு தேவையான ஆலோசனையை கால்நடை மருத்துவ பல்கலை ஆராய்ச்சி மையம் வழங்குகிறது. உலகில் 25 ஆயிரம் பாசியினங்கள் உள்ளன. இதில் 75 வகை உணவாக பயன்படுகிறது. 3.5 கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றிய "ஸ்பைருலினா' என்ற நீலப்பச்சை மூலிகை பாசி 100 சதவீதம் மருத்துவ குணம் உடையது. இதை "சுருள்பாசி' என்றும் கூறுவர்.

மற்ற தாவரங்களை விட 40 சதவீதம் கூடுதலாக புவி மாசுபடுவதை தடுக்கிறது. ஆயிரம் கிலோ காய், பழங்களில் கிடைக்கும் ஊட்டச்சத்து இதன் ஒரு கிலோவில் கிடைக்கிறது என, நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. விண்வெளி உணவாக பயன்படுகிறது. இது முழுமையான சமச்சீர் உணவாக என்பதால் தினசரி 4 கிராம் வரை உட்கொண்டால் உடம்பிற்கு நல்லது என, உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. "ஸ்பைருலினா' வளர்ப்புக்கு தேவையான ஆலோசனையை திண்டுக்கல் கால்நடை மருத்துவ பல்கலை ஆராய்ச்சி மையம் வழங்கி வருகிறது. மையத்தலைவர் பீர்முகமது கூறியதாவது: "ஸ்பைருலினா' மீன், இறைச்சி, முட்டையை காட்டிலும் 5 மடங்கு புரதம் உள்ளது. தாவர வகை புரதமாக இருப்பதால் எளிதில் ஜீரணமாகும். வைட்டமின் ஏ, காமாலினோலெனிக் அமிலம், குளோரோபில், பைகோசையனின், மெக்னீசியம், வைட்டமின் பி12, அமினோ அமிலங்கள் உள்ளன. நோய் எதிர்ப்பு, ரத்த சிவப்பு அணுக்கள் அதிகரிக்க, ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்துவது என பலவகையில் பயன்படுகிறது. இந்த பாசியை 10 அடி அகலம் 20 அடி நீள தொட்டியில் தண்ணீர் நிரப்பி வளர்க்கலாம். இதற்கு ரூ.60 ஆயிரம் இருந்தால்போதும். மாதம் ரூ.20 ஆயிரம் வரை லாபம் பெற முடியும், என்றார்.

## ரூ.1.50 கோடிக்கு பருத்தி வர்த்தகம்

நாமக்கல்,:நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, ஒரு கோடியே, 50 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் போனது. நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 8,500 பருத்தி மூட்டைகளை

விற்பனைக்கு கொண்டு வந்தனர். டி.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,920, குறைந்தபட்சமாக, 4,200 ரூபாய், சுரபி ரகம் அதிக பட்சமாக, 5,120, குறைந்த பட்சமாக, 4,200 ரூபாய். ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,470, குறைந்த பட்சமாக, 4,100 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், மொத்தமாக, ஒரு கோடியே, 50 லட்சம் ரூபாய்க்கு பருத்தி வர்த்தகம் நடந்தது.விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, ஆகிய பகுதியைச் சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

**<u>கால்நடைகளுக்குகோமாரி தடுப்பூசி</u>**

தர்மபுரிதர்மபுரி மாவட்டத்தில், மார்ச், 1ம் தேதி முதல் கால்நடைகளுக்கு, 8வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடப்படுகிறது.இதுகுறித்து கலெக்டர் விவேகானந்தன் வெளியிட்டுள்ள அறிக்கை:தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரியில் 35,455, நல்லம்பள்ளி, 41,642, பென்னாகரம் 51,638, பாலக்கோடு, 39,001, காரிமங்கலம் 49,462, அரூர் 64,312, மொரப்பூர், 47,088, பாப்பிரெட்டிப்பட்டி, 30,502 என, மொத்தம், 3,59,100 பசு, எருமைகள் உள்ளன. இவைகளுக்கு, வரும், 1ம் தேதி முதல், 21ம் தேதி வரை கோமாரி நோய் தடுப்பூசி வழங்கும் முகாம் நடக்க உள்ளது. இதில், அனைத்துத் துறையினரும் ஒருங்கிணைந்து மாவட்டத்தில் உள்ள அனைத்து பசு, எருமைகளுக்கும், 100 சதவீதம் தடுப்பூசி வழங்க வேண்டும். மாவட்டத்தில் உள்ள, 63 கால்நடை மருந்தகங்கள், மூன்று கால்நடை மருத்துவமனைகள், எட்டு யூனியன் அலுவலகங்கள், 138 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 298 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், 251 பஞ்சாயத்து அலுவலகங்கள், 1,330 அங்கன்வாடி மையங்கள் உள்ளிட்ட அலுவலகங்களில் பேனர்கள், ஸ்டிக்கர்கள் வைத்து கோமாரி நோய் தடுப்பூசி குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மேலும்,

விவரங்களுக்கு, 1077, 18004257016, 18004251071, குறுந்தகவலுக்கு 89038-91077 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**<u>ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம்</u>**

கரூர்,::கரூர் மாவட்டத்தில் இலவசமாக வழங்கப்பட்ட வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகளுக்கான மருத்துவ பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம் நடக்கிறது. கரூர் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி கூறியதாவது: தமிழகத்தில், வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள பெண் களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக, இலவச ஆடு வழங்கும் திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டது. கரூர் மாவட்டத்தில், 2011-12ம் ஆண்டில், 1,842 பயனாளிக்கு, 7,368 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 2012-13ம் ஆண்டில், 3,003 பயனாளிகளுக்கு, 12 ஆயிரத்து, 12 ஆடுகளும், 2013-14ம் ஆண்டில், 2,391 பயனாளிகளுக்கு, 9,748 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளது. பயனாளிகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு, 2011-12 மற்றும் 2013- 14ம் ஆண்டில் கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிக்கு, தமிழ் புத்தாண்டில் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளது.இலவசமாக வழங்கப்பட்ட வெள்ளாடுகள், செம்மறியாடுகளின் உற்பத்தி திறனை பெருக்கவும், எடையை அதிகரிக்கவும், கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடை மருந்தகம் மற்றும் கால்நடை கிளை நிலையப் பகுதிகளில், நாளை, (28ம் தேதி) குடற்புழு நீக்க சிகிச்சை முகாம் நடக்கிறது.ஆடுகள் வளர்ப்போர் அனைவரும் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.இவ்வாறு கலெக்டர் கூறினார்.

**<u>சொட்டு நீர் பாசனத்திற்கு விண்ணப்பிக்க அழைப்பு; கலெக்டர் தகவல்</u>**

விருதுநகர் : "மாவட்டத்தில் சொட்டுநீர்பாசனம் அமைக்க விவசாயிகள் விண்ணப்பிக்க நாளை (பிப்.,28 )கடைசிநாள்,"என, கலெக்டர் ராஜாராமன் தெரிவித்துள்ளார். அவரது அறிக்கை:மாவட்டத்தில் 2014-

15ம் நிதியாண்டில் ஆதிதிராவிடர் , பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம், பெரு விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு சொட்டு நீர்பாசனம் அமைக்க விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. குறு மற்றும் சிறு விவசாயிகள் தாசில்தார்களிடம் சான்றிதழ் பெற வேண்டும். கிணறு மற்றும் ஆழ்குழாய் கிணறு, மின் இணைப்பு பெற்றிருக்க வேண்டும். குத்ததை விவசாயிகள் பத்தாண்டு குத்தகை பதிவு பத்திரம் நகல் இணைக்க வேண்டும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விவசாயிகள் ஒன்றாக இணைந்து சொட்டுநீர்பாசனம் அமைத்துக் கொள்ளலாம். நிலத்தில் கம்ப்யூட்டர் 10(1) , ரேஷன் கார்டு நகல், புகைப்படம், வி.ஏ.ஓ.,விடம் பெற்ற அடங்கல், நிலத்தின் வரைபடம், மண் மற்றும் நீர்பரிசோதனை ஆவணங்களுடன் உரிய சொட்டு நீர்பாசன விண்ணப்பத்தினை நாளை(பிப்.28)க்குள் அந்தந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் தோட்டக்கலை மற்றும் வேளாண்துறை அலுவலர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## <u>பண்ணை குட்டைகளில் வறட்சி நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த வடிகால் பாதையை சீரமைக்க வேண்டும்</u>

கோவை, : கோவை மாவட்டத்தில் மழைக்காக அமைத்த பண்ணை குட்டைகள் நீரின்றி வறண்டு கிடக்கிறது. இதனால் கிராமங்களில் நிலத்தடி நீர் மட்டத்தின் அளவு குறைந்துள்ளது. இதனையொட்டி பண்ணைக்குட்டைகளின் வடிகால் பாதையை சீரமைக்க மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. கோவை மாவட்டத்தில் 3.15 லட்சம் எக்டரில் விவசாய நிலப்பரப்பு இருக்கிறது. கடந்த ஆண்டில் 1.71 லட்சம்

எக்டரில் விவசாயம் நடந்தது. இதில் சுமார் 40 சதவீத விளைபயிர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டது. குறிப்பாக 49 ஆயிரம் எக்டரில் தென்னை மரங்கள் காய்ந்து போனது. சிறு தானியங்களும் அதிகளவு வறட்சியால் பாதிக்கப்பட்டது. வறட்சியை தவிர்க்க, மாவட்ட நிர்வாகம் மற்றும் வேளாண்மை துறை சார்பில் பண்ணை குட்டை திட்டம் துவக்கப்பட்டது. கடந்த ஆண்டில், மாவட்ட அளவில் 1100 இடத்தில் பண்ணை குட்டை அமைக்கப்பட்டது. ஒரு பண்ணை குட்டை அமைக்க 2 லட்ச ரூபாய் முதல் 3 லட்ச ரூபாய் வரை செலவிடப்பட்டது. இதற்காக 22 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் இந்த குட்டைகளில் மழை நீர் தேங்கவில்லை. இதனையொட்டி வடிகால் எல்லைகளில் நீர் தேங்கும் வகையில் அமைந்த இந்த குட்டைகளில் வடிகால் பாதையை சீரமைத்து தென் மேற்கு பருவ மழையை முழுமையாக தேக்க மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. இது குறித்து வேளாண்மை துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ''1.5 மீட்டர் ஆழத்தில் 15 மீட்டர் நீள, அகலத்தில் பண்ணை குட்டை அமைக்கப்பட்டுள்ளது. தற்போது இக்குட்டைகளின் வடிகால் களை சீரமைக்க உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. மேலும் விவசாயிகள் கூட தங்கள் விளை நிலத்தில் பண்ணை குட்டை எளிதாக அமைக்கலாம். 50 சென்ட் இடம் இருந்தால் தாழ்வான இடத்தில் பண்ணை குட்டை அமைக்க முடியும். மழை நீர் முழுவதும் இந்த குட்டையில் தேங்கும் வகையில் இந்த குட்டை உருவாக்க முடியும். குட்டையின் அடிப்பாகத்தில் களிமண் போட்டு தளம் அமைக்கலாம். இதன் மூலமாக அதிக நீரை சேமிக்க முடியும். இந்த குட்டையில் இருந்து மோட்டார் வைத்து தண்ணீர் எடுத்து விவசாயம் செய்யலாம். குட்டையில் கெண்டை, ஜிலேபி, கட்லா, ரோகு போன்ற மீன்களை வளர்க்கலாம். ஒரு குட்டையில் பல லட்சம் லிட்டர் நீரை தேக்கி வைக்க முடியும். குறைந்தபட்ச மழை பெய்தால் கூட போதும் ஆண்டு முழுவதும் பண்ணை குட்டையை நம்பி விவசாயம் செய்ய முடியும். இதன் மூலமாக விவசாய

பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்படுவதை வெகுவாக தவிர்க்க முடியும்,'' என்றனர்.

**<u>சின்ன வெங்காயம் வரத்து அதிகரிப்பு</u>**

கோவை, : தமிழகத்தில் சின்ன வெங்காயம் அறுவடை உச்சத்தில் உள்ளதால் கோவைக்கு வரத்து அதிகரித்துள்ளது. மொத்த விலையில் கிலோ ரூ.15 முதல் ரூ.22 வரை விற்பனை செய்யப்படுகிறது. சின்ன வெங்காயம் கோவை - மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள எம்.ஜி.ஆர்.காய்கறி மார்க்கெட்டிற்கு லாரிகளில் கொண்டு வரப்படுகிறது. மொத்த விலையில் கிலோ ரூ.15 முதல் ரூ.22 வரை விற்பனை செய்யப்படுகிறது. சில்லரை விற்பனை கடைகளில் இதன் விலை கிலோ ரூ.23 முதல் ரூ.30 வரை விற்பனையாகிறது. இது குறித்து கோவை மாவட்ட மொத்த அனைத்து காய்கனி வியாபாரிகள் சங்கம் செயலாளர் அப்துல்அஜீஸ் கூறுகையில், 'வட மாநிலங்களில் சின்ன வெங்காயத்தை பயன்படுத்த மாட்டார்கள். இதனால் தமிழகத்தில் உற்பத்தியாகும் சின்ன வெங்காயம் பெரும்பாலும் தமிழகத்திலேயே விற்பனை செய்ய வேண்டும். இதனால் வரத்து அதிகரிக்கும்போது விலை சரிவடையும். கடந்த ஜனவரியில் சின்ன வெங்காயம் அறுவடை துவங்கியது. அப்போது மொத்தவிலையில் கிலோ ரூ.18 முதல் ரூ.25 வரை விற்றோம். தற்போது அறுவடை உச்சத்தில் உள்ளதால் வரத்து அதிகரித்து விலை சரிவடைந்துள்ளது. இன்னும் ஒரு மாதத்திற்கு அறுவடை நடைபெறுவதால் விலை ஓரிரு ரூபாய் முன்பின்னாக இருக்கும். விலை உயராது. பெரிய வெங்காயம் தற்போது மகாராஷ்டிராவில் இருந்து அதிகளவில் வருகிறது. தரம் வாரியாக பிரித்து மொத்த விலை கிலோ ரூ.18 முதல் ரூ.22க்கு விற்கப்படுகிறது. சில்லரை விற்பனை நிலையங்களில் கிலோ ரூ.25 முதல் ரூ.30 வரை விற்கப்படுகிறது. இதன் விலையும் ஓரிரு மாதத்திற்கு உயர வாய்ப்பில்லை' என்றார்.

**திருச்செந்துறையில் வாழைத்தார் ஏலம் அமெரிக்கா பல்கலை ஆராய்ச்சி மைய இயக்குனர் நேரில் பார்வைரூ.1,01,940க்கு தார்கள் ஏலம்**

திருச்சி, : திருச்செந் துறையில் வாழைத்தார்கள் பொது ஏலம் விடப்பட்டது. ஏலம் நடைபெறுவதை அமெரிக்கா ஆராய்ச்சி மைய இயக்குனர் பார்வை யிட்டு விவசாயிகள், வியாபாரிகளிடம் விவரம் கேட்டறிந்தார். ஸ்ரீரங்கம் திருச் செந்துறையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் வாரத்தில் ஒவ்வொரு செவ்வாய்கிழமை தோறும் வாழைத்தார் பொது ஏலம் விடப்பட்டு வருகிறது. இந்த பொது ஏலத்தில் இடைத்தரகர்களின்றி, எந்தவித கமிஷன் இல்லாமல் ஏலத்தில் பங்கேற்ற விவசாயி கள் அனைவருக்கும் உடனுக்குடன் பணமும் பட்டுவாடா செய்யப்படு வதால் விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இந்நிலையில் நேற்று முன்தினம் நடந்த வாழைத்தார் பொது ஏலத்தை பார்வையி டுவதற்காக அமெரிக்கா இலியோனிஸ் பல்கலைக் கழக ஆராய்ச்சி மையம் இயக்குனர் ராண்டி சான்கோ என்பவர் திருச்செந்துறை வருகை புரிந்தார். அவரை கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விரிவாக்கத் துறை பேராசிரி யர்கள் வரவேற்றனர். பின்னர் அங்கு நடந்த பொது ஏலத்தை பார்வை யிட்ட ராண்டி சான்கோ, நேரடி ஏலம் முறை பற்றியும், விவசாயிகள் அவர்களு டைய விலை நிர்ணயம் மற்றும் விற்பனை செய்வதில் என்னென்ன சிக்கல்கள் உள்ளது என்பதையும் கேட்டறிந்தார். மேலும் விற்பனையில் தகவல் தொழில் நுட்ப சாதனங்களை அதிக பயன்படுத்தி விலை விபரங்கள், சந்தை விபரங் கள் ஆகியவற்றை அறிய என்னென்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என கேட்டறிந்த அவர், விவசாயி கள் மற்றும் வியாபாரிகளிடம் தனித்தனியாக ஆலோசனை நடத்தினார். அதனைத் தொடர்ந்து பொது ஏலம் நடைபெற்றது. இந்த பொது ஏலத்தில் லால்குடி, அந்தநல்லூர், பெருகமணி, கிளியநல்லூர், சிறுகாம்பூர், சென்னக்கரை, செங்குடி உள்ளிட்ட கிராமங் களை சேர்ந்த 29 விவசாயிகள் பூவன், ரஸ்தாளி, கற்பூர வள்ளி, மொந்தன், பச்ச நாடன்,

ஏலரசி ரகங்களை சேர்ந்த 1,032 வாழைத் தார்களுடன் வந்தனர். இதேபோல் பெருகமணி, சிறுகமணி, ஜீயபுரம், கடியாக்குறிச்சி, புத்தூர், கே.கே.நகர், ஏர்போர்ட் ஆகிய இடங்களிலிருந்து வந்திருந்த 13 வியாபாரிகள் வாழைத்தார்களை ஏலம் எடுத்தனர். இதில் மொத்தம் ரூ.1,01,940க்கு வாழைத்தார் கள் ஏலம் எடுக்கப்பட்டது. இதில் ரஸ்தாளி தார் ஒன்று அதிகபட்சமாக ரூ.350க்கும், பூவன் ரூ.255, கற்பூரவள்ளி ரூ.115, மொந்தன் ரூ.310, பச்சலாடன் ரூ.210, ஏலரசி ரூ.255 வீதம் ஏலம் போனது. தரமான வாழைத் தார்கள் நல்ல விலைக்கு ஏலம் போனது.இந்த வாரமும் இடைத்தரகர்களின்றி, கமிஷன் இல்லாமல் ஏலத் தில் பங்கேற்ற விவசாயிகள் அனைவருக்கும் உடனுக்கு டன் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

## <u>மண்ணச்சநல்லூர் தொகுதியில் ரூ.12.5 கோடியில் விரைவில் 3 இடங்களில் தடுப்பணைஅமைச்சர் தகவல்</u>

திருச்சி,: மண்ணச் சநல்லூர் தொகுதியில் மொத்தம் ரூ.12.5 கோடி மதிப்பில் 3 இடங்களில் தடுப்பணைகள் கட்டும் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் பூனாட்சி தெரிவித்துள்ளார். திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், நெய்வேலி கிராமத்தில் சிறப்பு மனுநீதி நிறைவுநாள் முகாம் நேற்று நடந்தது. முசிறி ஆர்டிஓ ஜெயினுலாப்தீன் வரவேற்றார். இம்முகாமில் 430 பயனாளிகளுக்கு ரூ.69,18,775 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி அமைச்சர் பூனாட்சி பேசுகையில், மாதந்தோறும் ஒரு வருவாய் கிராமத்தில் நடைபெறும் இந்த மக்கள் குறைதீர்க்கும் நாள் முகாம் முதன்முதலாக நெய்வேலி கிராமத்தில் நடைபெறு கிறது. கடந்த 4ஆண்டுகளில் இந்த நெய்வேலி கிராமத்தில் சாலை, குடிநீர், சிறுபாலம் என பல்வேறு பணிகள் நடைபெற்றுள்ளன. இக்கி ராமத்திற்குத் தேவையான பணிகளை அதிகாரிகள் நிறைவேற்றி தருவார்கள். மண்ணச்சநல்லூர் தொகுதியில் ரூ.3கோடி மதிப்பில் திண்ணக்கோனம் தடுப்பணை, ரூ.3கோடி மதிப் பில் பேரூர் தடுப் பணை,

ரூ.6.5 கோடி மதிப் பில் சித்தாம்பூர் தடுப்பணை ஆகிய பணிகள் விரைவாக மேற்கொள்ளப்படும். மேலும் நெய்வேலி ஏரியை மராமத்து செய்து தூர் வார்வதற்கான திட்டமும், மூவானூர் கிராமத்தில் அரசு கலைக்கல்லூரி அமைப்பதற்கான திட்ட மும் அரசின் பரிசீலனையில் உள்ளது என்றார். கலெக்டர் பழனிசாமி தலைமை வகித்து பேசுகையில், பொதுமக்கள் அரசின் நலத்திட்டங்களை பெற ஒரு காலத்தில் அதிகாரிகளை தேடி செல்ல வேண்டிய நிலை இருந்தது. ஆனால், தற்போது அந்த நிலை மாறி, அரசு அதிகாரிகள் மக்களை தேடிச் சென்று அவர்களின் கோரிக்கைகளை இது போன்ற சிறப்பு மனுநிதிநாள் முகாம் மூலம் நிறைவேற்றி வருகிறார்கள். இதன் மூலம் உங்களின் நிலையை அறிந்து மனுக்கள் பெற்ற ஒரு வார காலத்திற்குள் உரிய தீர்வு வழங்கப்படுகிறது. கிராமப்புற பெண்கள் சமஉரிமை பெற்றிட, தங்கள் சொந்தக்காலில் நின்று தொழில் செய்திட கிராம அளவிலான பஞ்சாயத்து கூட்டமைப்புகள் அமைக் கப்பட்டுள்ளது. ஏழைகள் முன்னேற்றம் அடைந்திட முசிறி ஒன்றியத்தில் 628 மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மூலம் 33 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களும், மாவட் டம் முழுவதும் 270 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளது என்றார். முசிறி தாசில்தார் மலர்க்கொடி நன்றி கூறினார்.

## வயல்களில் பூச்சி நோய்களை ஒழிக்க

பழநி, : வயல்களில் பூச்சிநோய்களை ஒழிக்கும் முறை குறித்து பழநி வேளாண் உதவி இயக்குநர் சாந்தாமணி விளக்கம் அளித்துள்ளார். வயல்களில் பூச்சி நோய் கள் ஏற்படாமல் இருக்க வயல் மட்டத்திலிருந்து வரப்பின் ஓரத்தில் சுமார் 3ல் 1 பங்கு உயரத்தில் தட்டைப்பயிறு விதைக்க வேண்டும். இந்த தட்டைப்பயிரில் நெற்பயிரை தாக்காத அசு வினி உற்பத்தியாகும். இத னால் ஏராளமான பொறிவண்டுகள் கவரப்படும். பொறி வண்டுகள் நெற் பயிரை தாக்கும் பலவித மான சாறு உறிஞ்சும் பூச்சி களை தாக்கி அவற்றை உண்டு கட்டுப்படுத்தும்.1 ஹெக்டேருக்கு 3 கிலோ தட்டைப்பயிறு விதை தேவைப்படும். வரப்புகளை வெட்டி சுத்தம்

செய்ய வேண்டும். வடிகால் வசதிகளை சரி செய்து தேவையான அளவு மட்டு மே நீர் கட்ட வேண்டும். தேவைக்கு அதிகமாக நீர் கட்டும்போது பூச்சிநோய் தாக்குதல் அதிகமாகும் என்பதால் தேவைக்கு ஏற்ப நீர்ப்பாய்ச்ச வேண்டும். 2 சதுர மீட்டருக்கு 1 குருத்து பூச்சியினுடைய முட்டைக்குவியல் காணப்பட்டால், டிரைக்கோகிரம் மா ஜப்பானிக்கும் முட்டை ஒட்டுண்ணிகள் 1 ஹெக்டேருக்கு 5 சிசி வீதம் விட வேண்டும். பூச்சிகளை கட்டுப்படுத்த கூடிய ஊன் விழுங்கிகளான நயாட்ஸ் எனும் தட்டான் பூச்சிகளின் இளம் பருவ பூச்சிகளை வயலில் சிறுதொட்டிகள் அல்லது குட்டைகளில் தண்ணீர் தேக்கி வைப்பதன் மூலம் இனம் பெருக செய்யலாம். தட்டான் பூச்சிகளின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படும் நேரத்தில் பூச்சிக்கொல்லிகளை தெளிக்கக் கூடாது. புகையான் பூச்சிகளை கட்டுபடுத்தக் கூடிய மைரிட் எனும் விழுங்கிகள் இல்லாத வயல்களில் அவற்றை கொண்டு வந்து விட வேண்டும். நெல் வயல்களில் நீர் தொடர்ந்து தேங்கி நிற்கும் இடங்களில் மீன் வளர்ப்பதால் பூச்சிகள் கட்டுப்படுத்தப்படுகிறது. கூடுதல் வருமானமும் கிடைக்கிறது. சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த கூடிய பிவே ரியா மற்றும் மெட்டாரைசி யம் போன்ற பூஞ்சாளங் களை உபயோகிக்கலாம். விளக்குப்பொறிகளை அமைத்தும் நோய் பூச்சி களை அழிக்கலாம். விவசாயிகள் இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களையோ, வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தையோ அணுகலாமென பழநி வட்டார வேளாண் உதவி இயக்குநர் சாந்தாமணி தெரிவித்துள்ளார்.

## <u>சிறுதானியம் பயிரிட விரிவான திட்டம் வேளாண் உதவிஇயக்குநர் தகவல்</u>

காரைக்குடி, : விவசாயிகள் சிறுதானியம் பயிரிட ஏதுவாக வேளாண்மைத்துறை மூலம் விரிவான திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது என வேளாண்மை உதவி இயக்குநர் கணேசன் தெரிவித் துள்ளார். இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது. காரைக்குடி கல்லல் வட்டாரத்தில் கடந்த இரண்டு வருடங்களாக நெல் சாகுபடி விவசாயி

களுக்கு போதிய அளவு கை கொடுக்கவில்லை. எனவே இவ்வாண்டு விவசாயிகள் உறுதியான நிலைப்பாட்டோடு நெல் விவசாயத்தை முழு ஈடுபாட்டோடு மேற்கொள்ளவில்லை. தொடர்ந்து பயிரிடப்படாத நிலங்களில் கருவேல மற்றும் களைச் செடிகள் வளர்ந்து மண்வளம் குறைய வாய்ப்புள்ளது. தொடர்ந்து பயிர் செய்யப்படவில்லையெனில் விவசாயிகளுக்கு போதிய வருமானம் குறைந்துவிடும். கால்நடைகளுக்கு தேவையான வைக்கோல் மற்றும் தட்டை தட்டுப்பாடு ஏற்படும். மக்கள் நகரங்களை நோக்கி இடம் பெயருதல் ஏற்படும். எனவே விவசாயிகள் சிறுதானியம் பயிரிட ஏதுவாக விரிவான திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி மிக குறைந்த பயிர் காலமான 75 நாட்களில் சிறுதானியங்களை சாகுபடி செய்யலாம். விதை முதல் அனைத்து இடுபொருட்களும் இலவசமாக விநியோகம் செய்யப்படும். மதிப்பு கூட்டி விற்பனை செய்ய தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அறுவடைக்கு பின்பு மதிப்பு கூட்டி விற்பனை செய்ய இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. ஒரு எக்டேர் சிறுதானியம் சாகுபடி செய்யவுள்ள விவசாயிகளுக்கு மண்மாதிரி, விதி, உயிர் உரம் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் முழுமானியத்துடன் வழங்கப்படும். பண்ணைக்குட்டைகளில் உள்ள தண்ணீரை பயன்படுத்திட ரூ 10000 மானியத்தில் ஆயில் இன்ஜின் வழங்கப்பட உள்ளது. சிறுதானியங்களை பொறுத்தவரை வறட்சியை தாங்கி வளரும் தன்மை கொண்டது. விதைப்பு, வளர்ச்சி, பூக்கும் மற்றும் முற்றும் பருவத்தில் மட்டும் ஈரம் தேவைப்படும் என்றார்.

## <u>கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம் வருகிற மார்ச் 1ம் தேதி முதல் 21ம் தேதி வரை நடைபெறுகிறது. கோமாரி நோய் வராமல் தடுப்பது மற்றும் தடுப்பூசி விழிப்புணர்வு குறித்த ஒருங்கிணைப்பு குழு கூட்டம், கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்தில் கலெக்டர்

ராஜேஷ் தலைமை வகித்து பேசியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 3 லட்சத்து 63 ஆயிரத்து 300 கால்நடைகளுக்கு வருகிற மார்ச் 1ம் தேதி முதல் 21ம் தேதி வரை (21 நாட்கள்) சம்பந்தப்பட்ட துறையினருடன் ஒருங்கிணைந்து, கோமாரி நோய் தடுப்பூசி போட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதுகுறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த, கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் வருகிற 27ம் தேதி (நாளை) சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்தப்படுகிறது. இதில் கால்நடை பராமரிப்புத்துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டு, கோமாரி நோய் தடுப்பூசி போடுவதன் அவசியத்தை எடுத்துக்கூறி, கிராம மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். 100 சதவீதம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணியை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவர்கள் கிராமங்களில் போதுமான விளம்பரம் செய்ய வேண்டும். இவ்வாறு கலெக்டர் பேசினார். கூட்டத்தில், கிருஷ்ணகிரி கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் டாக்டர் கந்தசாமி, தடுப்பூசி திட்ட பணிகள் குறித்து விளக்க உரையாற்றினார். கூட்டத்தில், கால்நடை பராமரிப்புத்துறை, பால் வளத்துறை, வனத்துறை, புதுவாழ்வு திட்டம், மகளிர் திட்டம், நகராட்சி, பேரூராட்சி அலுவலர்கள், கால்நடை அறிவியல் பல்கலைக்கழக பேராசிரியர் மற்றும் ஊரக ஊராட்சித்துறை அலுவலர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## <u>காய்கறி பயிரிட ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு அவசியம்</u>

உடுமலை,: காய்கறிகள் பயிரிட ஒருங்கிணைந்த பாதுகாப்பு முறை அவசியம் என வேளாண் அதிகாரி விளக்கம் அளித்துள்ளார். உடுமலை தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் டாக்டர் இளங்கோவன் விடுத்துள்ள அறிக்கை: உடுமலை வட்டாரத்தில் காய்கறிகள் சாகுபடியில்

விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு முன்பே பாதுகாப்பு என கருதி அதிக வீரியமுள்ள மருந்துகளை தெளித்தால் அது பயிருக்கே ஆபத்தாக முடியும். போதிய அடி உரம் இல்லாமல், போதிய இடைவெளி இல்லாமல்,குழித்தட்டு முறை இல்லாமல் நாற்றுகள் தயாரித்து நட்டால் வேர் வளர்ச்சி பெறாத செடியாகவே இருக்கும். குறைந்த வேர் பகுதியால் போதிய சத்துக்களை எடுக்க முடியாது. பனி, மேகமூட்டம் உள்ள காலத்தில் தாவரங்கள் தனது உள் இயக்கப் பணிகளை மெதுவாகவே மேற்கொள்ளும். இந்நேரத்தில் பயிர் வளரவில்லையே என நினைத்து தேவையில்லாமல் பயிர் ஊக்கி மருந்துகளை அதாவது ஆரம்ப காலத்தில் தெளிக்க வேண்டியவற்றை முதிர்ந்த காலத்தில் தெளித்தால் காய் பிடிக்காமல் தாவரம் மலட்டுத் தன்மை பெற வாய்ப்பு உள்ளது எனவே பூச்சித்தொல்லையை நிபுணர்களின் உதவியுடன் கண்காணித்து அவரது ஆலோசனையின் பேரில் மருந்து தெளிக்க வேண்டும். மேலும் பயிர் வளர உதவும் பஞ்சகவ்யா,மண்புழு குளியல் நீர்,தசகவ்யா, தேமோர் கரைசல்,விளக்குப் பொறி,இனக்கவர்ச்சிப் பொறி,வரப்பு பயிர், ஊடுபயிர்,பொறிப்பயிர் உள்ளிட்ட உத்திகளை கையாண்டால் நன்மை கிடைக்கும். பல உயிர் உர வகைகள். மண்புழு உரம், வேப்பம்பிண்ணாக்கு, வேப்பிலை கரைசல்,வேம்பு மருந்துகள் போன்றவையும் பயன்பாட்டுக்கு உள்ளன.இவ்வாறு இளங்கோவன் தெரிவித்திருக்கிறார்.

## <u>அரவக்குறிச்சியில் கோமாரிநோய் தடுப்பூசி முன்னேற்பாடு விளக்க கூட்டம்</u>

அரவக்குறிச்சி, : அரவக்குறிச்சியில் ஒன்றிய அளவில் நூறு சதவீதம் கால்நடைகளை தாக்கும் கோமாறி நோயை ஒழிக்க கால்நடைகளுக்கு 8 வது சுற்று கோமாறி நோய் தடுப்பூசி போடுவது பற்றிய முன்னேற்பாடு விளக்கக் கூட்டம் நடைபெற்றது. அரவக்குறிச்சி ஒன்றியத்தில் நூறு சதவீதம் கால்நடைகளை தாக்கும் கோமாரி நோயை ஒழிக்க கால்நடைதுறை சார்பில் தீவிர முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக 8வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடுவது பற்றிய முன்னேற்பாடு விளக்கக்கூட்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்ட மன்றத்தில் நடைபெற்றது. ஒன்றிய துணை ஆணையர் கணேசன் தலைமை வகித்தார். தாசில்தார் உதயகுமார் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் கால்நடை டாக்டர் ராஜேந்திரன்கோமாரி நோயை நூறு சதவீதம் ஒழிக்க 8வது சுற்று தடுப்பூசி போடுவது, ஒவ்வொரு பகுதியிலும் விவசாயிகளுக்கு இத்தகவலை தெரிவித்து முகாமை எவ்வாறு நடத்துவது, அதற்கான முன்னேற்பாடுகள் செய்வது எவ்வாறு என்பது பற்றி விளக்கிப் பேசினார். கூட்டத்தில் கால்நடை மருத்துவர்கள், உதவியாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், வரி ஆய்வாளர்கள் மற்றும் கால்நடைத்துறை களப்பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## <u>வேளாண் திட்டங்களை விவசாயிகள் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் கலந்தாய்வில் தகவல்</u>

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை வட்டார வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை விரிவாக்க சீரமைப்பு திட்டம் 2014-15 ன் கீழ் கலந்தாய்வு ஆலோசனை கூட்டம் புதுக்கோட்டை வட்டார பண்ணை தகவல் மற்றும் ஆலோசனை மையத்தில் நடைபெற்றது. தொழில்நுட்ப குழு தலைவர் சுப்ரமணியன் தலைமை வகித்தார். வட்டார தொழில்நுட்ப குழு அமைப்பாளரும் வேளாண்மை உதவி இயக்குநருமான ரவிச்சந்திரன் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப் பட்டு வரும் வேளா ண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களின் தொழில்நுட்ப செயல் விளக்கங்கள், மாவட்டங்களுக்கிடையேயான கற்றறிவு பயணம், அம்மா பண்ணை மகளிருக்கான பயிற்சிகள் தொடர்பான விபரங்களை வட்டார தொழில் நுட்ப குழு அமைப்பாளர் ரவிசந்திரன் எடுத்துரைத்தார். வேளாண்மை துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களை விவசாயிகள் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது குறித்து வட்டார தொழில் நுட்ப குழு தலைவர் சுப்ரமணியன் விளக்கினார்.

கூட்டத்தின் போது, விவசாயிகளை தஞ்சாவூர் காட்டுத் தோட்டத்தில் உள்ள மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையத்திற்கும், செட்டிநாட்டில் உள்ள மானா வாரி ஆராய்ச்சி நிலையத்திற்கும் கற்றறிவு பயணம் செல்ல தீர்மானிக்கப்பட்டது. அம்மா பண்ணை மகளிர் குழு விவசாயிகளுக்கு கறவை மாடுகள் வளர்ப்பு மற்றும் தரமான உளுந்து விதை உற்பத்தி செய்தல் குறித்த பயிற்சி நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. கூட்டத்தில் பங்கேற்ற ஒவ்வொரு துறையினரும் தங்கள் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களை விரிவாக எடுத்து கூறினர். மேலும் 2015-16 ஆண்டு செயல்படுத்தப்பட இருக்கும் திட்டங்களுக்கான செயல் திட்டம் அனைத்து துறையினர் மற்றும் அட்மா உறுப்பினர்களின் ஆலோசனையின்படி தயார் செய்யப்பட்டது. விவசாயிகளின் வயல்களில் செயல் விளக்கங்கள் அமைக்கும் முறைகள் பற்றியும் அதனால் ஏற்படும் பயன்களை பற்றியும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா, கற்றறிவு பயணத்தால் விவசாயிகள் நேரடியாக பெறக் கூடிய பயன்பாடு பற்றி உதவி தொழில்நுட்ப மேலாளர் நவாப்ராஜா, அம்மா பண்ணை மகளிர் குழு விவசாயிகளுக்கு நடத்தப்படும் பயிற்சிகளின் பயன்பாடுகள் பற்றி உதவி தொழில்நுட்ப மேலாளர் அருளரசு ஆகியோர் விரிவாக எடுத்து கூறினர்.கூட்டத்தில் தோட்டக்கலைத் துறை, வேளாண் வணிகத்துறை, வம்பன் வேளாண் அறிவியல் மையம், வேளாண் பொறி யியல் துறை, கால்நடைத் துறை, பட்டு வளர்ச்சித் துறை ஆகிய துறைகளை சார்ந்த அலுவலர்கள் மற்றும் அட்மா உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## நாகை மாவட்டத்தில் 2.72 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போட இலக்கு

நாகை,: கோமாரி நோய் குறிப்பாக கலப்பின மாடுகளை அதிகம் தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்துகிறது. இந்நோயால் இறப்புகள் குறைவாக இருந்தபோதிலும், கறவை மாடுகளில் பால் உற்பத்தி குறைவு, எருதுகளின் வேலைத்திறன்

குறைவு, சினைப்பிடிப்பு தடைபடுவது, இளங்கன்றுகளின் இறப்பு போன்ற பாதிப்புகளினால் ஏற்படும் பொருளாதார இழப்பு அதிகம். இந்நோய் பொதுவாக குளிர் மற்றும் பனிக்காலம், நோய் பாதிக்கப்பட்ட இடங்களிலிருந்து வாங்கி வரப்பட்ட கால்நடைகள், சுகாதாரமற்ற கால்நடை வளர்ப்பு, கால்நடைகளுக்கு தடுப்பூசி போடா மல் இருத்தல் ஆகிய காரணங்களால் கோமாரி நோய் விரைவாக காற்றின் மூலம் பரவுகிறது. இந் நோயால் பாதிக்கப்பட்ட மாடுகளின் சிறுநீர், பால், உமிழ்நீர், சாணம் ஆகியவற்றால் மற்ற கால்நடைகளுக்கு பரவுகிறது. கோமாரி நோயை கட்டுப்படுத்த நாகை மாவட்டத்தில் 7 சுற்று தடுப்பூசி பணிகள் முடிவடைந்துள்ளது. தற்போது வரும் மார்ச் 1ம் தேதி முதல் 21 நாட்களுக்குள் 8வது சுற்று தடுப்பூசி பணி தொடங்க உள்ளது. மாவட்டத்தில் 2.72 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. எனவே, மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் தங்களுடைய பசுக்கள், எருதுகள், எருமைகள், 4 மாதங்களுக்கு மேற்பட்ட இளங்கன்றுகளுக்கு மார்ச் 1ம் தேதி முதல் 21 நாட்களுக்கு ஒவ்வொரு கிராமத்திலும் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் தங்கள் கால்நடைகளை அழைத்து சென்று கோமாரி நோய் தடுப்பூசி போட்டு பயன்பெறலாம். இவ்வாறு கலெக்டர் பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## <u>விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி</u>

விருதுநகர், : வேளா ண்மை இணை இயக்குநர் சுப்பையா தகவல்: வேளாண் துறை, தோட்டக்கலைத் துறை சார்பில் இன்று (26ம் தேதி) திருவில்லிபுத்தூரில் விவசாயிகளுக்கு சாகுபடி குறித்த தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட உள்ளது. திருவில்லிபுத்தூர் அரசு தோட்டக்கலைத் துறை பண்ணை பூவாணியில் இப்பயிற்சி நடைபெறும். கோவிலாங்குளம் வேளா ண்மை அறிவியல் நிலை யம் மற்றும் திருவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் பயிற்சி அளிக்க உள்ள னர். தென்னை,

மா மற்றும் காய்கறி சாகுபடி, கவாத்து செய்தல் உள் ளிட்ட செயல்முறை விளக்கங்கள் அளிக்கப்படும். விருதுநகர் மாவட்ட தென்னை, மா, காய்கறி விவசாயிகள் இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயன் பெற லாம். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**<u>நம்பியூர் பகுதியில் புதிய நிலக்கடலை ரகம் அறிமுகம்</u>**

கோபி, : கோபி அருகே உள்ள நம்பியூர் வட்டாரத்தில் புதிய ரக நிலக்கடலை அறிமுகம் செய்யப்படுகிறது. கோபி மற்றும் அதைச் சுற்றி உள்ள நம்பியூர், கெட்டி செவியூர், திட்டமலை, கோசனம், செல்லி பாளையம், பொத்தபாளையம், சுண்டமேடு, வெள்ளகோயில் பாளையம் உள்ளிட்ட பகுதியில் சுமார் 10 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய நிலங்கள் உள்ளது. இந்த பகுதியில் கிணறு மற்றும் ஆழ்குழாய் கிணறுகள் வறண்டு விட்ட நிலையிலும், வாய்க்கால் பாசனம் இல்லாததாலும் பெரும்பாலும் மழையை நம்பியே விவசாயம் செய்து வருகின்றனர். அதனால் பருவமழை காலங்களில் பெரும்பாலும் குறுகிய காலப்பயிரான நிலக்கடலை, சோளம் இவற்றுடன் ஊடுபயிராக நரிப்பயிறு, பச்சை பயிறு, தட்டைப்பயிறு போன்றவற்றை பயிரிட்டு வந்தனர். இந் நிலையில், கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே ரக நிலக்கடலை மட்டுமே விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். இந்நிலையில் தற்போது நிலக்கடலையில் புதிய ரகத்தை அறிமுகம் செய்ய வேளாணமைத் து¬ றயினர் திட்டமிட்டுள்ளனர். தற்« பாது தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் அறிமுகம் செய்துள்ள வி.ஆர்.ஐ-6, வி.ஆர்.ஐ-7, கோப-4, கோ-5, கோ-6, ஆழியார் மற்றும் ஆந்திரா ரகம் கே-6 ஆகிய புதிய ரகங்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இது குறித்து நம்பியூர் வேளாண்மை அலுவலக உதவி இயக்குநர் ஆசைத்தம்பி கூறுகையில், ‘கோபி மற்றும் சுற்றுப்புற பகுதியில் கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட நிலக்கடலை ரகங்கள் மட்டுமே பயிரிடப்படுகிறது. தொடர்ந்து ஒரே ரகத்தை பயிரிடும் போது, மகசூல்

குறைவதுடன், விவசாயிகளுக்கும் போதிய வருவாய் கிடைப்பதில்லை. அதனால் தற்போது தமி ழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தி உள்ள ரகங்கள் குறைந்த தண்ணீரிலும், அதிக மகசூல் தரக்கூடியது. நம்பியூர் மற்றும் சுற்றுப்புற பகுதி விவசாயிகள் புதிய ரக நிலக்கடலையை பயிரிடுவதன் மூலம் குறுகிய காலத்தில் நல்ல வருவாய் பெறமுடியும்' என்றார்.

**<u>சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் மானியத்தில் விவசாய பொருட்கள் விநியோகம் விவசாயிகளுக்கு அழைப்பு</u>**

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் மானிய விலையில் விவசாய பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. இதில் பயன்பெற விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: 2014- 15 தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் என்ற திட்டத்தின்கீழ் நெல், சிறுதானியங்கள் மற்றும் கரும்பு ஆகிய உணவு தானிய பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு தொழில்நுட்ப செயல்விளக்கங்கள், மானிய விலையில் விதைகள், விதை உற்பத்தி மானியம், கைத்தெளிப்பான்கள், பண்ணை கருவிகள், பயிர் பாதுகாப்பு மருந்துகள், கலைக்கொல்லி, ஒவ்வொரு துளி நீரையும் உற்பத்திக்கு பயன்படுத்தும் வகையில் நீர்கொண்டு செல்லும் குழாய்கள், தெளி ப்புநீர் பாசன கருவிகள், மழைதூவி அனைத்தும் 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. ரொட்டவேட்டர் என்ற எந்திரம் ரூ.35 ஆயிரம் மானியத்திலும், நீர் கொண்டு செல்லும் குழாய் ரூ.15 ஆயிரம் மானியத்திலும், கைத்தெளிப்பான் ரூ.600 மானியத்திலும், விசை தெளிப்பான் ரூ.3000 மானியத்திலும் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் நெல் நுண்ணூட்ட கலவை, கலைக்கொல்லி ஆகிய இடுபொருட்கள் 50 சதவீத மானியத்திலும் வழங்கப்படுகிறது. நீர்கொண்டு செல்லும் குழாய்கள், தெளிப்புநீர் பாசன கருவி மற்றும் மழைதூவி ஆகிய நீர் சேமிப்பு கருவிகள் தேவைப்பட்டால் எத்தனை இஞ்சஸ் பைப்புகள்

அதாவது 3 அல்லது 4 இஞ்ச் தேவை என்பதை சம்மந்தப்பட்ட பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொண்டு விபரம் தெரிவித்தால் மானியம் போக மீதம் விவசாயிகள் பங்குதொகை எவ்வளவு என்ற விபரத்தை தெரிந்து கொள்ளலாம். இதற்கு விவசாயிகள் பட்டா, சிட்டா அடங்கல், ஆதார் அடையாள அட் டை, 2 புகைப்படம், போர்வெல் இருக்கும் இடத்தை அடையாளம் காட்டுவதற்கான பீல்டுமேப் மற்றும் மானியம் போக நிறுவனத்துக்கு செலுத்த வேண் டிய பங்கு தொகைக்கான வங்கி வரைவு ஆகிய ஆவணங்களுடன் விண்ணப்பம் செய்து பொருட்களை வாங்கி விவசாயிகள் பயன்பெறலாம்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நாமக்கல்லில் ரூ.1½ கோடிக்கு பருத்தி ஏலம்**



நாமக்கல்லில் 8 ஆயிரத்து 500 மூட்டை பருத்தி ரூ.1½ கோடிக்கு ஏலம் போனது.

பருத்திஏலம்

நாமக்கல் - திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்க தலைவர் தென்னரசு மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னி லையில் பருத்தி ஏலம் நடந்தது. இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம் பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும்

விவசாயிகள் 8 ஆயிரத்து 500 மூட்டை பருத்தியை விற் பனைக்கு கொண்டுவந்திருந்தனர்.

ரூ.1½கோடிக்குவிற்பனை

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.1½ கோடிக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 100 முதல் ரூ.4 ஆயிரத்து 470 வரைக்கும், டி.சி.எச்.ரக பருத்தி குவிண் டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 200 முதல் ரூ.4 ஆயிரத்து 920 வரைக்கும், சுரபி ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 200 முதல் ரூ.5 ஆயிரத்து 120 வரைக்கும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணா புரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

## தூத்துக்குடி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கால், வாய் நோய் தடுப்பூசி போடும் பணி 1–ந் தேதி தொடங்குகிறது



தூத்துக்குடி, தூத்துக்குடி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கால், வாய் நோய் தடுப்பூசி போடும் பணி 1–ந் தேதி தொடங்குகிறது.

இது குறித்து மாவட்ட கலெக்டர் ரவிகுமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

தூத்துக்குடி மாவட்டத்தில் கால் மற்றும் வாய் நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் 6 மாதங்களுக்கு மேற்பட்ட அனைத்து மாடுகளுக்கும் இலவசமாக தடுப்பூசி போடும் பணி வருகிற 1–ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) தொடங்கி, 21–ந் தேதி வரை நடைபெறுகிறது.

### கால்–வாய் நோய்

மாடுகள் உள்ளிட்ட கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் கான நோய் வைரஸ் நச்சுகிருமியால் ஏற்படுகிறது. நோய் பாதித்த கால்நடைகளின் வாய் மற்றும் கால் பகுதியில் கொப்புளங்கள் ஏற்பட்டு அதிக காய்ச்சலுடன் காணப்படும். நோய் பாதித்த கறவை மாடுகளில் பால் உற்பத்தி பெரிதும் குறைவதால் பொருளாதார இழப்பு ஏற்படுகிறது. எனவே இந்த நோயை முற்றிலும் பரவாமல் தடுப்பதற்கு தடுப்பூசி போடுவது அவசியம்.

<u>தடுப்பூசி முகாம்</u>

இதையொட்டி தடுப்பூசிப் போடும் பணிக்காக தூத்துக்குடி மாவட்டத்தில் கால்நடை உதவி மருத்துவர்கள் தலைமையில் 42 குழுக்கள் அமைக்கப்பட்டு மாவட்டம் முழுவதும் தடுப்பூசி பணி மேற்கொள்ளப் படவுள்ளது. ஒவ்வொரு வருடமும் 6 மாதத்திற்கு ஒருமுறை தடுப்பூசி முகாம் நடைபெற்று வருகிறது. தற்போது நடைபெற உள்ள 8–வது சுற்று கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசி முகாமின் போது தவறாமல் அனைத்து மாட்டினங்களுக்கும் நோய் தடுப்பூசி போட்டு பயனடையுமாறு கால்நடை வளர்ப்போர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் ரவிகுமார் தெரிவித்து உள்ளார்.